# மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள்

➢ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோரிக்கைகளை கனிவுடன் கேட்கிறார், பரிசீலிக்கிறார், ஏற்றுச் செய்து தருகிறார் என்கிற கருத்துப் பரவி, விரவி, தொடர்ந்து வரும் கோரிக்கை ஏராளம் என்றாலும் நமது முதல்வர் அவர்கள் சலிக்கவில்லை; சளைக்கவில்லை அனைத்தையும் மனமுவந்து ஏற்றுக் கொண்டார்கள். அவை பின்வருவன:-

➢ வரிவிலக்கு அளிக்கப்படுபவை

**(i) செங்கல் உற்பத்திக்குப் பயன்படுத்தப்**

**படும் களிமண்** (Clay).

**(ii) கடலை மிட்டாய், எள்ளு மிட்டாய், பொறி உருண்டை மற்றும் கையினால் தயாரிக்கப் படும் மிட்டாய்கள்.**

**(iii) தூத்துக்குடி மற்றும் பிற மாவட்ட உப்பு உற்பத்தியாளர்களின் கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்று உற்பத்தியாளர்கள் தொழிற்சாலைக்கு விற்கும் போது வரி விலக்கு அளிக்கப் படுகிறது.**

**(iv) எலும்புத் துகள்கள் (**bone meal).

➢ **<u>12.5% லிருந்து 4% ஆக குறைத்து நிர்ண யிக்கப்பட்டவை.</u>**

**(i) பழைய டயர்களை** (retreaded tyres) **புதுப்பிக்கப் பயன்படுத்தப் படும் ட்ரீட் ரப்பர்**

**(tread rubber) உட்பட குஷன், வல்கனைசிங் ரப்பர் போன்ற பொருள்கள் மீது விதிக்கப்படும் 12.5 சதவிகித வரி 4 சதவீதமாக குறைக்கப்படுகிறது.**

**(ii) ரூபாய் 200—க்குக் குறைவாக மதிப்புள்ள காலனிகளுக்கு ஏற்கனவே வரி விலக்களிக்கப் பட்டுள்ளது. தற்போது ரூபாய் 200—க்கு மேல் மதிப்புள்ள வணிகச் சின்னமிடப்படாத காலனிகளுக்கு 4 சதவீதமாக வரி குறைக்கப் படுகிறது. வணிகச் சின்னமிட்ட காலணிகள் மீதான வரி விதிப்பு 12.5 சதவிகிதத்திலேயே தொடரும்.**

**(iii) காலணிகள் தயாரிப்பிற்குப் பயன் படுத்தப்படும் உதிரி பொருள் களுக்கு 4**

**சதவிகித வரி நிர்ணயிக் கப்படும்.**

**(iv) நெய்யப்படாத துணி (**non-woven fabric) **மற்றும் அதில் தயாரிக் கப்படும் பொருட்களுக்கும் வரி 4 சதவிகிதமாகக் குறைக்கப் படுகிறது.**

- **சிவில் ஒப்பந்தப்பணி மற்றும் ஏனைய ஒப்பந்தப்பணி செய்வோர் விருப்பப்பட்டால் தற்பொழுது இணைக்க வரி முறையில் வரி செலுத்தலாம். அவ்வாறு வரி செலுத்தும் வணிகர்கள் வெளி மாகாணத்திலிருந்து பெரும் பாலான பொருட்களைக் கொள்முதல் செய்து, ஒப்பந்த பணியில் பயன்படுத்தி 2 சதவிகிதம் அல்லது 4 சதவிகிதம் என இணக்கவரி செலுத்துகின்றனர். இதனால் தமிழ்நாட்டு வணிகம் பாதிப்புக்குள்ளாவது மட்டுமின்றி, அரசுக்கும் பெரும் வருவாய்**

இழப்பு ஏற்படுகிறது. பல வணிகர் சங்கங்கள் இதுசம்பந்தமாகக் கோரிக்கை வைத்துள்ளன. அக்கோரிக் கையினை ஏற்று தமிழக வணிகர்களின் நலனைக் கருதியும் வெளி மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்து ஒப்பந்தப்பணி செய்வோருக்கு இணக்கவரி முறை பொருந்தாது என மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படும்.

## ➢ <u>வணிக நல வாரியம்</u>

தற்பொழுது வழங்கப்பட்டு வரும் குடும்ப நல உதவித் தொகை ரூ.20,000/– ஐ ரூ.50,000/– மாக உயர்த்தி வழங்கப்படும்.

தற்போது வணிகர் நல வாரிய உறுப்பினர்களுக்கு இதய அறுவை சிகிச்சை மற்றும் புற்றுநோய் அறுவை சிகிச்சைகளுக்கு மருத்துவ சான்றிதழின் பேரில் தற்போது ரூ.25,000/– வழங்கப்பட்டு வருகிறது. இதனை ரூ.50,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும். மேலும் வணிக நல வாரிய பெண் உறுப்பினர்களுக்கு கர்ப்பப்பை அறுவை சிகிச்சைக்கு ரூ.20,000/– வழங்கப்படும்.

நடைமுறையிலுள்ள டயாலிசிஸ்,

ஹீமோதெரபி, ரேடிசயேஷன் தெரபி, ஆங்கியோபிளாஸ்டி ஆகிய மருத்துவ சிகிச்சைகளுக்கு ரூ.15,000/– தொடர்ந்து வழங்கப்படும்.

இதுவரை உறுப்பினரின் மகன்/மகள் யாரேனும் ஒருவருக்கு ஓராண்டிற்கு மட்டுமே கல்லூரி படிப்பிற்கு ரூ.3000/– வழங்கப்படுகிறது. இதை உறுப்பினரின் மகன்/மகள் யாரேனும் ஒருவருக்கு ரூ.5000/– ஒவ்வொரு கல்வியாண்டுக்கும் உயர்த்தி வழங்கப்படும். தொழிற்கல்விக்கு ரூ.10,000/– ஒவ்வொரு கல்வியாண்டுக்கும் வழங்கப்படும்.

"நலிவுற்ற வியாபாரிகளுக்கு" கூட்டுறவு தொழிற்கூடங்களில் தயார் செய்யப்படும் பெட்டி கடை வாங்கவும் அல்லது மூன்று சக்கர

மிதிவண்டி (Tri-Cycle) வாங்கவும் பின் தங்கிய மாவட்டங்களாக கருதப்படும் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களிலிருந்து மட்டும் வரும் விண்ணப்பங்களுக்கு தற்பொழுது ரூ.10,000/– வழங்கப்பட்டு வருகிறது. இதனை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தி, ஒவ்வொரு ஆண்டிற்கும் முதலில் பெறப்படும் 10 விண்ணப்பங்களுக்கு மட்டும் இத்திட்டத்தின் கீழ் ரூ.10,000/– வீதம் வழங்கப்படும்.

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற சில வணிகர்களின் ஆண்டு விற்பனைத் தொகை ரூ.10,00,000/–க்கு கீழ் இருக்குமானால் அவர்கள் தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின்

**கீழ் பதிவு பெற முடியாத சூழ்நிலை உருவாகிறது. எனவே, ஏற்கனவே தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் பதிவு பெற்று வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராகியுள்ள வணிகர்களை, தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாவிட்டாலும் வணிகர் நல வாரியத்தில் உறுப்பினர்களாக தொடர்ந்து நீடிக்கலாம்.**